இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 07 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 01 – ஞாயிற்றுக்கிழமை 17 ஆகஸ்ட் 2025 – சென்னை 32 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 07 : Thiruvalluvar Year - 2056 - Aavani 01 - Sunday 17 August 2025 - Chennai 32 Pages ₹ 5.00


## அமெரிக்காவில் இறக்குமதி வரி அதிகரிப்பு : கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள

# தமிழ்நாட்டின் வர்த்தகத்தை மீட்க நடவடிக்கை தேவை!

## பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஆக.17 -**

**இந்தியப் பொருட்களின் மீதான இறக்குமதி வரியினை அமெரிக்கா உயர்த்தியுள்ள நிலையில், தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளில் இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வர்த்தகத்தை மீட்டெடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வலியுறுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் அவர்களுக்கு நேற்று (16.8.2025) கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில், இரு நாடுகளுக்கும் பயனளிக்கக் கூடிய வர்த்தக ஒப்பந்தத்தை எட்டுவதற்கு ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் பாராட்டுவதாகவும், தேசிய நலன்களைப் பாதுகாப்பதற்கான ஒன்றிய அரசின் நிலைப்பாட்டை முழுமையாக ஆதரிப்பதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், தற்போதைய 25% வரி மற்றும் அதன் தொடர்ச்சியாக 50% வரி அதிகரிப்பு காரணமாக கடுமையான தாக்கங்களை எதிர்கொள்வதால், தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கும் கவலை அளிக்கும் ஒரு பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதாக தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாட்டில் தாக்கம் அதிகமாக இருக்கும்!

கடந்த நிதியாண்டில், இந்தியாவின் மொத்த பொருட்கள் ஏற்றுமதியான $433.6 பில்லியன் மதிப்பிலான பொருட்களில் 20 விழுக்காடு அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கும் நிலையில், தமிழ்நாட்டின் $ 52.1 பில்லியன் பொருட்களில் 31 விழுக்காடு அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகக் கோடிட்டுக் காட்டியுள்ளார். இவ்வாறு அமெரிக்க சந்தையை தமிழ்நாடு அதிக மாகச் சார்ந்திருப்பதால், இறக்குமதி வரியின் தாக்கம், இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் அதிகமாக இருக்கும் என்றும், இந்த வரிவிதிப்பு தமிழ்நாட்டின் உற்பத்தித் துறை மற்றும் வேலைவாய்ப்பில் குறிப்பிடத்தக்க பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரிவிதிப்பினால் ஜவுளி, ஆடைகள், இயந்திரங்கள், ஆட்டோமொபைல்ஸ், ரத்தினக் கற்கள் மற்றும் நகைகள், தோல், காலணிகள், கடல் பொருட்கள் மற்றும் இரசாயனங்கள் துறைகளில் மிகவும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இந்தத் துறைகள் அனைத்தும் அதிகத் தொழிலாளர்களை சார்ந்தவை என்பது இன்னும் கவலைக்குரியது என்றும், இதில் எந்தவொரு ஏற்றுமதி மந்தநிலையும் விரைவாக பெருமளவிலான பணி இழப்புகளுக்கு வழிவகுக்கும் என்றும் தனது கடிதத்தில் கவலைபடத் தெரிவித்துள்ளார். 2024-2025 ஆம் ஆண்டில் இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதியில் தமிழ்நாடு 28% பங்களித்தது என்றும், இது இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களைக் காட்டிலும் மிகவும் அதிகம் என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

### 30 இலட்சம் பேர் வேலை இழக்கும் அபாயம்!

குறிப்பாக, தமிழ்நாட்டில் ஜவுளித் துறை கிட்டத்தட்ட 75 இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ள தாக குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், 25% வரி மற்றும் முன்மொழியப்பட்டுள்ள 50% வரியின் காரணமாக, 30 இலட்சம் பேர் வேலை இழக்கும் அபாயம் உள்ளதாகவும், இந்த நெருக்கடியைத் தணிக்க, நமது ஏற்றுமதி போட்டித்தன்மைக்கு நீண்டகாலமாகத் தடையாக இருக்கும் கட்டமைப்பு சிக்கல்களைத் தீர்ப்பது அவசியம் என்று தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இது தொடர்பாக, பாதிக்கப்பட்ட துறைகளைச் சேர்ந்த தொழில் அமைப்புகளுடன்தான் விரிவான ஆலோசனைகளை நடத்தியதாகவும், இந்த ஆலோசனைகளின் அடிப்படையில், ஜவுளித் துறைக்கு இரண்டு அம்சங்களில், அதாவது, மனிதனால் உருவாக்கப்பட்ட இழை மதிப்புச் சங்கிலிக்கான ஜி.எஸ்.டி விகிதங்களில் உள்ள முரண்பாடுகளை நீக்கி, தலைகீழ் வரி கட்டமைப்பை சரிசெய்தல், முழு சங்கிலியையும் 5% ஜி.எஸ்.டி. அடுக்குக்குள் கொண்டு வருதல் மற்றும் அனைத்து வகையான பருத்திக்கும்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்





தருமபுரி மாவட்டம்



ரூ.1,705 கோடியில்

புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்
முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்தல்
மற்றும்
அரசு நலத்திட்ட உதவிகள்
வழங்கும் விழா

தலைமை

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

தருமபுரி மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் திராவிட மாடல் அரசின் சாதனைகள்

ரூ.447.26 கோடியில்
43,86,926 பயனாளிகளுக்கு
நலத்திட்ட உதவிகள்

ரூ.3,011 கோடியில்
31,032
வளர்ச்சித் திட்டப் பணிகள்

மொத்தம் ரூ.3,458.26 கோடி
மதிப்பிலான
நலத்திட்ட உதவிகள் மற்றும்
வளர்ச்சித் திட்டப் பணிகள்

செ.ம.தொ.இ./953/வரைகலை/2025


அரசு மருத்துவமனை கூடுதல் கட்டடம், அரூர், தருமபுரி


அரசு மேல்நிலைப்பள்ளி, நத்தமேடு, தருமபுரி


தரக்கட்டுப்பாடு ஆய்வகம், தருமபுரி

நாள் : 17.8.2025 ஞாயிற்றுக்கிழமை, நேரம் : காலை 10.00 மணி, இடம் : தடங்கம் பி.எம்.பி. கல்லூரி அருகில், தருமபுரி.

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

எல்லார்க்கும் எல்லாம்!

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 600 009.